# விபஸ்ஸனா செய்தி மடல்

**விபஸ்ஸனா; ஸயாஜி ஊ பா கின் வழிமரபில் திரு.சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கபடும் தியானமுறை**

(தொகுப்பு 31 எண் 9 , செப்டம்பர் 20 , 2021 ).

விபாசனா ஆராய்ச்சி நிறுவனத்தின் மாதாந்திர பிரசுரம்.

வலை தளம் www.vridhamma.org பன்னாட்டு வலை தளம் www.dhamma.org

விபாசனா செய்திமடலின் சிறப்பு ஆன்-லைன் பதிப்பு


---

## தம்மா பொன்மொழிகள்

**அனிச்சா வத ஸங்காரா, உப்பாதவயதம்மினோ**

**உபஜ்ஜித்வா னிருஜ்ஜந்தி தேஸம் வூபஸமோ ஸுகோ**

**-திக நிக்காயா 2. 221, மஹா-பரிணிபானா சுத்த**

"நிலையற்றவை உண்மையில் நிபந்தனைக்குட்பட்டவை. இயற்கையாய் எழும்பி மறைந்துவிடுகின்றன. எழுந்த அவை அழிக்கப்பட்டால், அவற்றின் அழிப்பு உண்மையான மகிழ்ச்சியைத் தருகிறது.

---

# மதிப்பிற்குரிய கோயங்காஜியின் வரலாற்றுத் தீர்வு



கோயங்காஜியின் 8 வது ஆண்டு மறைவு தினம் செப்டம்பர் 29 ஆம் தேதி வருகிறது. இந்த நல்ல தருணத்தில் அவருடைய பல பண்புகளையும் அவர் விட்டுச்சென்ற குறிப்பிடத்தக்க பணிகளையும் நினைவில் கொள்வது பொருத்தமானது. இந்த சந்தர்ப்பத்தில் 1971 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அவருடைய மூத்த சகோதரர் பாபு பையாவுக்கு (சகோதரர் - பாபுலால் கோயங்கா) எழுதப்பட்ட சில முக்கியமான கடிதங்களையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். அந்த நாட்களில் நான் அவருடைய செயலாளராகவும் உதவியாளராகவும் பணியாற்றினேன்.

1971 ஜனவரி 19 ஆம் தேதி, அவர் புத்த கயாவில் உள்ள பர்மா விகாரையில் ஒரு முகாமை நடத்திக் கொண்டிருந்தபோது சயாகியின்

மறைவு பற்றிய செய்தியைப் பெற்றார். நான் அவரிடம் தந்தி திறக்கப்படாமல் எடுத்துச் சென்றேன். அவர் அதைத் திறந்தவுடன் அவரது அசையாத முகத்தின் வெளிப்பாடு தெளிவாகத் தெரிந்தது. நான் அசையாமல் நின்று அவரைப் பார்த்தேன். இந்த டெலிகிராமில் என்ன எழுதப்பட்டுள்ளது. நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் கேட்க எனக்கு தைரியம் இல்லை. சில நிமிடங்களின் இடைவிடாத அமைதிக்குப் பிறகு அவர் அறிவித்தார் - தீபம் அணைந்து விட்டது! எனக்கு அவரின் கூற்று புரியவில்லை. அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். பின்னர் அவர் மெதுவாக கூறினார் - சயாகி இனி இல்லை நம்மை விட்டு மறைந்தார்.

தியானப் பயிற்சி முகாமை வெற்றிகரமாக முடித்த பிறகு, கோயங்காஜி ஜனவரி 28 முதல் பிப்ரவரி 7 வரை சுய பயிற்சியை மேற்க்கொள்ள முடிவு செய்தார். இந்த 10-நாள் சாதனா மிக முக்கியமான மைல் கற்களில் ஒன்றாக உள்ளது. அது ஒரு வரலாற்று நிகழ்வு. அவர் தம்ம வலிமை மற்றும் உத்வேகம் பெற்றார். அந்த நேரத்தில் மரியாதைக்குரிய கோயங்காஜி தனது வாழ்நாள் முழுவதும் தம்மத்தின் பிரச்சாரத்தில், தம்ம சேவையில் செலவழிக்க வேண்டும் என்ற உறுதியான முடிவை எடுத்தார். இந்தப் பயிற்சிக்குப் பிறகு, பம்பாய்க்குத் திரும்பியதும், அவர் மார்ச் 1 முதல் ஏப்ரல் 21 வரை 4 முகாம்களை நடத்தினார்.

இந்த நேரத்தில் மரியாதைக்குரிய கோயங்காஜி மேலும் பல முக்கியமான பணிகளை மேற்கொள்வதாக சபதம் மேற்க்கொண்டார். பல தடைகள் எதிர் வந்தாலும் சபதத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றினார். பல வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட இந்த சபதங்களின் விளைவாக இன்று மென்மையான தூய்மையான தம்மம் அனைவருக்கும் கிடைக்கிறது. அப்போது எடுக்கப்பட்ட முடிவுகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. குறிப்பாக தம்மின் தூய்மையான

தன்மையை சிறிதளவும் மாறாமல் அனைவருக்கும் அளிப்பதில் அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். பாபு பையாவுக்கு அவர் எழுதிய பின்வரும் கடிதங்கள் அவருடைய ஆளுமையைப் பற்றி நமக்குச் சொல்லும்போது இதை விளக்குகின்றன. - (ஆசிரியர்)

## சயாகி உ பா கின் மறைவு

முகாம்: புத்த கயா

22 ஜனவரி, 1971

மரியாதைக்குரிய பாபு பையா,

ப்ரணாம்!

மரியாதைக்குரிய குருதேவ் தனது உடலை விட்டு நீங்கிய செய்தி மேகம் இல்லாத வானத்திலிருந்து விழும் பெரும் இடி போல கிடைத்தது. ஒரு கணம் திகைத்துப்போன எனக்கு, நான் அனாதையாகி விட்டது போல் தோன்றியது.

ஆனால் அடுத்த கணமே அனிச்சாவின் வலுவான ஓட்டம் என் முழு உடலிலும் தொடங்கியது. தாயின் மறைவின் போதும் [அவரது வளர்ப்பு தாய் மறைவு] எங்கள் வணிகங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்ட செய்தி வந்த நேரத்திலும் இந்த ஓட்டம் தொடங்கி அடுத்த 24 மணி நேரத்திற்கு தொடர்ந்தது. உங்கள் தந்தி வந்த நேரத்திலிருந்து என் மன நிலை அதே நிலைக்காகியது.

குருதேவரின் மறைவில் என் இழப்பு எப்படிப்பட்டது என்பதை நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள முடியும் என்றாலும் மனம் சமநிலையுடன் இருக்க வேண்டும் என்பதனால் உணர்ச்சியில் நிலைகுலயவில்லை. மனம் அதிர்சியால் அசைந்து தடுமாறவில்லை.

அது சோகமாக அல்லது பரிதாபமாக மாறவில்லை. அதற்கு காரணம் அவரால் நான் பெற்ற இந்த ஆழ்ந்த தம்ம விழிப்புணர்வு. தம்மத்தின் இந்த ஈடுயிணையில்லாத வெற்றியினால் எனக்கு அமைதி கிடைத்தது.

இந்த முகாமில் தியானம் செய்தவர்கள் 92 பேர் இருந்தனர். அவர்களில் சிலர் ஒரு மோசமான மன இறுக்கத்துக்கு உள்ளாயினர். சிலர் அழுதனர். இந்த மனச்சோர்வு சூழலில் நான் கூட அழ ஆரம்பித்திருந்தால் முழு முகாமிலும் தியானம் செய்பவர்கள் அழும் சூழ்நிலை உண்டாகலாம்.

அசோகம் விரஜம், கீமம் (துக்கமற்றது கரைபடியாதது, மற்றும் பாதுகாப்பானது) - தம்மிக் சமநிலையை பராமரிக்கும் இதனை தொடர்ந்து விடாமல் பயிற்சி செய்வதன் மூலம்

- சித்தம் யஸ்ஸ ந கம்பதி - மனம் நிலைகுலயாமல் இருப்பதால் நல் உணர்வால் நிரப்பப்படுகிறது. முழு முகாமுக்கும் அது வலிமை அளிக்கிறது. இதன் மூலம் மரியாதைக்குரிய குருதேவ் அவருக்கு உண்மையான தம்ம அஞ்சலி செலுத்தினேன்.

மாலை 5 மணிக்கு உங்கள் இரண்டாவது தந்தி பெற்றேன். நான் அதை படித்து முடித்தவுடன் கிராமம் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

உண்மையில் ஒளி நம்மை விட்டு போனதை அது காட்டியது போலானது. இரவு 1:30 வரை மின்சாரம் வரவில்லை. முழு இருள் ஆட்சி செய்தது. அந்தி நேரம், மற்றும் உங்கள் தந்தி பெற்றவுடன் அந்த நாள் வானம் முன்பே இருட்டத் தொடங்கியது.

இரவு முழுவதும் வானம் தடையின்றி மழை பொழிய ஆரம்பித்தது. அது தொடர்ந்து அழுவது போல் தோற்றமளித்தது. அடுத்த நாள் மாலை 3 மணிக்கு தகனம் காலத்தில் - பர்ஜன்யா - இடி மற்றும் மழை தேவா - மிகவும் பெருமளவில் தோன்றியது.

- சில நிமிடங்கள் என் இதயம் அதிர்ந்தது. முழு இயற்கையும் அழுவதை நான் உணர்ந்தேன்.

பூமி, காற்று, சூரியன், மேகங்கள், வானம் மற்றும் மரங்கள் ஆகியவை ஒன்றாக இணைந்து அவரின் பிரிவுத்துயரை வெளிப்படுத்துவது போல் சுற்றுச்சூழலில் பெரும் கன மழையும் பலத்த காற்றினால் உண்டான மரம் போன்றவற்றில் பலத்த அசைவுகளும் தோன்றின.

கனமான ஒன்றரை நாள் மழைக்குப் பிறகு இறுதியாக வானம் இயல்பு நிலைக்கு மாறியது. இப்போது தெளிவாக உள்ளது.

உண்மையிலேயே, மரியாதைக்குரிய குருதேவ் மற்றும் பூமி, இந்த இயற்கைக்குரிய தேவர் இடையே - ஒரு ஆழமான தொடர்பு இருந்தது என்பது அவரை நெருக்கமாக அறிந்தவர்களால் நன்கு அறியப்பட்டதாகும்.

அதனால் இயற்க்கையின் இந்த வெளிப்பாடு இயல்பானது.

இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவர்கள் மற்றும் மனிதர்களின் ஒப்பற்ற முதன்மை ஆசிரியர் கௌதம புத்தர், இந்த பூமிக்கு வந்தார். தொடர்ந்து அவரை பின்பற்றி புத்தரின் சீடர் வந்தார்.

தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சிறந்த ஆசிரியரான அவரை இழந்ததில் பூமி துயரத்தில் ஆழ்ந்தது.

பர்மா மாபெரும் மனிதனை இழந்துவிட்டது. பர்மாவின் விலைமதிபற்ற ஆபரணத்ததின் மதிப்பை உணர்ந்தவரால் மட்டுமே இந்த இழப்பை புரிந்து கொள்ள முடியும்.

மா சயாமாவின் ஊக்கத்தினாலும் குருதேவின் கடைசி விருப்பத்தின் காரணமாகவும், தியான பயிற்சி முகாம் தொடர்ந்து நடந்தது.

கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் மழை காரணமாக மாணவர்கள் திறந்த மாடியில் உள்ள கூடாரத்தின் கீழ் அமர முடியவில்லை. இருப்பினும் தியானப் பயிற்சி முகாம் நடந்தது. இப்போது வானம் தெளிவாக உள்ளது. 27 ஆம் தேதி வரை முகாம் தடையின்றி நிச்சயமாக நிறைவடையும் என நான் நம்புகிறேன்.

மரியாதைக்குரிய குருதேவரின் தம்ம வலிமை சயாமாவின் மெட்டா எனக்குத் துணைபுரியும். நான் எப்படி அனாதையாக இருக்க முடியும்!

தம்மம் நிலைத்து இருக்கும் வரை மரியாதைக்குரிய குருதேவ் உயிருடன் உள்ளார். அவர் தம்மத்தை தவிர வேறில்லை.

இன்று மா சயாமாவிடமிருந்து நான் இன்னொரு தந்தி பெற்றேன்.

தம்மதூதர் தன் வேலையில் தளர்த்தக் காட்டக் கூடாது. இது மதிப்புக்குரிய குருதேவ்வின் உத்தரவு. என் தம்ம வேலையை பலவீனப்படுத்த விடமாட்டேன். இப்போது என் தோள்களில் ஒரு பெரிய பொறுப்பு உள்ளது.

14 டிசம்பர் 1970 இல் மதிப்புக்குரிய குருதேவ் ஆசிரியரான 25 வது ஆண்டுவிழா கொண்டாடினார்.

சரியாக 25 ஆண்டுகளுக்கு முன்பு சயா தேத் கையி தனது உடலை விட்டு வெளியேறுவதற்கு முன் குருதேவ்விடம் தம்ம ஜோதியினை ஒப்படைத்தார். அது குருதேவரின் கைகளில் பிரகாசமாக எரிந்தது.

புத்தர் வாழ்ந்து 2500 ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிரியர் - சீடர் பாரம்பரியம் உடைக்கப்படாமல் குருதேவ் ஆசிரியர் இந்த சுடரை பாதுகாத்தார்.

டிசம்பர் 14, 1970 அன்று இந்த ஜோதியை என் கைகளுக்குக் கொடுத்தார். இந்த தம்ம மரபுரிமையை தந்தி வழியாக மற்றும் கடிதங்கள் மூலம் என்னிடம் ஒப்படைத்தார்.

ஒரு மாதம் முழுவதும் தன் கடமைகளை செய்ய செலவழித்த பிறகு அவர் இந்த உலக வாழ்க்கையை விட்டு விலகினார்.

இந்த தம்ம பரம்பரை என்னிடம் ஒப்படைக்கப்பட்ட போது, நான் அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவில்லை.

அவர் ஏன் திடீரென்று, மிக விரைவாக முடிவு எடுத்தார் என்பது இப்போது தெளிவாக புரிகிறது.

வாழ்நாள் முழுவதும் மற்றவர்களின் நலனுக்காக உழைக்கும் போது அவர் ஓய்வெடுக்க வேண்டிய நேரம் வந்தவுடன் என் தோள்களில் இந்த கடினமான பணியை வைத்தார்.

ஓ, அத்தகைய மிகப்பெரிய பொறுப்பை என்னால் எப்படி நிறைவேற்ற முடியும். நான் அவருடைய காலடியில் உட்கார்ந்து இன்னும் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம்.

ஆனால் நேரம் யாருக்காகவும் நிற்காது. அது நகர்கிறது.

பாபு பையா உங்கள் பாதுகாப்பின் கீழ் அனைத்து உலக இன்பங்களும் மற்றும் உங்களின் வழிகாட்டுதல் மூலம் தம்ம, அறிவையும் பெற்றதில் மனம் மகிழ்வுருகிறேன்.

எனவே என் வாழ்வின் மீதமுள்ள ஆண்டுகள் தம்ம சேவைக்காக அளிப்பதற்கு நான் சபதம் எடுப்பதில் எந்த சிரமமும் இருக்கவில்லை. அது எனக்கு மிகவும் இயல்பாக வருகிறது. மரியாதைக்குரிய குருதேவ் நிப்பான-தாதுவின் இந்த தம்ம ஜோதியை மிகுந்த நம்பிக்கையுடன் என் கைகளில் இந்த மகத்தான பணியை வழங்கியுள்ளார்.

நிப்பானா தாதுயை உருவாக்கி அதற்கு தகுதியானவராக எனக்கு வலிமை கிடைக்கட்டும். மகத்தான பணியை செவ்வனே ஆற்ற

அன்னை சயாமா, மரியாதைக்குரிய தந்தை தாய் மற்றும் மூத்த சகோதரான தங்களின் ஆசீர்வாதங்களைப் பெறுவேன் என்று நம்புகிறேன். மற்றும் இளைச்சி தேவியின் (மாதாஜி) தம்ம வலிமை, மற்றும் மற்ற அனைத்து குடும்ப உறுப்பினர்களின் ஆழமான மெட்டா உள்ளதால் இதன் வலிமையால் புத்தரின் தகுதியான மகன் என நிரூபிக்க இயலும் என்று நம்புகிறேன்.

## புத்த கயாவில் சுய பயிற்சி

இந்த முகாம் ஜனவரி 27 ஆம் தேதியுடன் முடிவடையும்.

28 ஆம் தேதி மாலை முதல் 10 நாட்களுக்கு நான் ஒரு சுய பயிற்சிக்காக அமர்ந்திருப்பேன்.

போன தடவை நான் புத்த கயா வந்தபோது எனக்கு யாரையும் தெரியாது. நான் எனது சாதனா ஒரு ஹோட்டல் அறையில் (அரசு ஓய்வு இல்லம்) செய்ய வேண்டியிருந்தது.

இப்போது நிச்சயமாக, தம்மத்துடன் முழு சூழ்நிலையும் மாறிவிட்டது. கோவில் நிர்வாகமே பூசாரி மற்றும் உறுப்பினர்கள் தீட்சை எடுத்துள்ளனர். (சபதம் துறத்தல்). எனவே எனக்காக அனைத்து கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

கோவிலுக்குள் மற்றும் போதி மரத்தின் கீழ் தம்ம அதிர்வுகள் உள்ளது. உண்மையில் முழு போதி பகுதியும் மிகவும் சக்திவாய்ந்தவை. நான் அடிக்கடி வருகை தரும் போது சாதனாவில் அமர விரும்பினேன்.

இப்போது இரண்டு இடங்களின் சாவியும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனால் தினமும் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை நான் கோவிலிலும் போதி பகுதியிலும் எனது சாதனா செய்ய அமர்வேன்.

அத்தகைய வாய்ப்பு அடிக்கடி ஏற்படாது. நேரடியாக மேலாளர் அலுவலகம் அருகே கோவிலுக்கு எதிரில், சிறிய தனிமைப்படுத்தப்பட்ட அறை எனக்காக காலி செய்யப்பட்டது. நான் பகலில் அங்கேயே இருப்பேன்.

பின்னர் இரவில் கோவில் பூட்டப்பட்ட பின் எனது பெரும்பாலான நேரம் கோவிலில் பின்னர் கீழ் வஜ்ராசனத்திற்கு (பகவான் புத்தர் அறிவொளி பெற்ற இருக்கை) அருகிலுள்ள போதி மரம் அருகில் நான் சாதனாவின் பொருட்டு அமர்ந்திருப்பேன்.

போதி மரம் அருகில் போதி வளாகத்தில் நான் தனிமையில் இரவு நேரத்தை செலவிடுவேன். மன அமைதி மற்றும் சாந்தியை பெற்றேன்..

பிப்ரவரி 7 அன்று மரியாதைக்குரிய குருதேவ் புனித நினைவாக பெரிய அளவில் சங்க தானம் நான் ஏற்பாடு செய்கிறேன். நாங்கள் அவருடைய வாரிசுகள், அவரது தம்ம கருவூலத்தின் பாதுகாவலர்கள், அவருடைய தம்மத்தின் மகன்கள். எனவே அவரது நினைவாக தான, சங்க தானம் கொடுப்பது எங்கள் உரிமை மற்றும் எங்கள் பொறுப்பு. இந்த பொறுப்பை நாங்கள் மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவோம். நான் இந்தியாவில் வாழும் அனைத்து பர்மிய பிக்குகளையும் அதில் பங்கேற்க அழைக்கிறேன். இந்தியாவின் நன்கு அறியப்பட்ட பிக்குகள் அனைவரையும் நாங்கள் அழைக்கிறேம்.

மரியாதைக்குரிய குருதேவ் பெயரில் பர்மிய பிக்குகளுக்கு நீங்கள் தானத்திற்கு அனுப்பிய பொருட்களைப் பயன்படுத்துவோம். மேலும் கூடுதலாக அவருக்கு தகுதியான தானாவை வழங்கவும் உள்ளோம்.

இந்த விலைமதிப்பற்ற தம்ம தானம் நான் இந்தியாவுக்குத் திரும்பியதிலிருந்து கொடுக்கப்பட்டவை. அனைத்தும் மரியாதைக்குரிய குருதேவ் அவரது பிரதிநிதியாக செய்யப்படுகிறது.

எதிர்காலத்திலும் என் வாழ்நாள் முழுவதும் நான் இதைப் போல தொடர்ந்து பணியாற்றுவேன் என்ற புனிதமான சபதத்தை எடுத்துக்கொள்கிறேன். மரியாதைக்குரிய குருதேவ்க்கு எனது நன்றிக் கடனை நிறைவேற்ற முயல்வேன்.

உங்களுடைய,

சத்ய நாராயண கோயங்கா



புத்த கயா கோவிலுக்கு உள்ளே இருக்கும் தியான அறை

இங்கே மரியாதைக்குரிய குருஜி சயாகியின் மறைவைத் தொடர்ந்து 1971, இரவில் தனது சுய பயிற்சிக்காக அமர்ந்திருந்தார்.

.------------------------------------------------------------------------------------------------------------------------

# சங்க தானத்தை மேற்கொள்வது

முகாம்: மும்பை

12 பிப்ரவரி 1971

மரியாதை பாபு பையா,

ப்ரணாம்.

பிப்ரவரி 8 ஆம் தேதி உங்கள் கடிதம் எனக்கு கிடைத்தது.

இதற்கு முன்பு எனக்கு அன்புள்ள ஸ்ரீ பிரகாஷ் ரிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது.

மற்றும் லாட்ஸாரியாவின் குழந்தைகள் மற்றொரு நீண்ட கடிதம் அனுப்பியிருந்தனர். உங்கள் சமீபத்திய கடிதங்களுக்கு என்னால் பதிலளிக்க இயலவில்லை.

ஜனவரி 28 முதல் பிப்ரவரி 7 வரை எனது சொந்த சாதனா இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை, புத்தர் கோவிலின் அமைதியான, சூழலில் மற்றும் போதி மரத்தின் கீழ் நடந்து கொண்டிருந்தது.

கடைசி சில நாட்களில், அன்பான கௌரிசங்கர் மற்றும் ராதேஷ்யம் [சகோதரர்கள்] சேர்ந்தனர். மற்றும் நள்ளிரவு வரை அன்புள்ள முராரி மற்றும் ஸ்ரீ பிரகாஷ் [மகன்களும்] சாதனாவில் இணைந்தனர். இனிமையான அனுபவம் பற்றி வேறு சில நேரங்களில் எழுதுகிறேன்.

நான் பிப்ரவரி 7 அன்று சங்க தானம் பொருட்டு 47 பிக்குமார்களை அழைத்தேன். ஆனால் 48 பேர் வந்தனர். மற்றும் சங்க தானம் புகழ்பெற்ற மதிப்புக்குரிய குருதேவ் அந்தஸ்துப்படி நடைபெற்றது.

மும்பையில் இருந்து வரவேண்டிய  சில பொருட்கள் சரியான நேரத்தில் வந்தடையவில்லை. இருந்தபோதிலும் இவை ஏற்கனவே பிரசாத மந்திரத்தில் "கூறப்பட்டது". இப்போது இந்த பொருட்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வாழும் அனைத்து பிக்குகளுக்கும் அனுப்பப்படும்.

மிகவும் அமைதியான மற்றும் தம்மிக் வழியில் முழு நிரலும் நடத்தப்பட்டது. வளிமண்டலம் அதன் உயர்ந்த உன்னத தாக்கத்தை அனைவரிடமும் அளித்தது.

புனிதமதிப்புக்குரிய குருதேவ் நினைவு கூர்தல் பொருட்டு தியான பயிற்சி நடத்தப்பட்டது. மற்றும் பின்னர் எனது சொந்த சுய பயிற்சி அத்துடன் பெரிய சங்க தானம் -  ஒரு "சயாகி யு பா கின் நினைவு நிதி அமைக்கப்பட்டது.

எங்கள் மூத்த சகோதரர் [பி.கே. கோயங்கா] ஒரு பெரிய தொகையை கோயங்கா குடும்பத்தின் சார்பாக அளித்தார்.

தவிர மரியாதைக்குரிய தந்தையும் தாயும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் தங்கள் தனிப்பட்ட திறனில் நன்கொடைகளை வழங்கினர்.

அத்துடன் வேறு சில மாணவர்கள் அவர்களின் விருப்பப் படி அவர்களின் சொந்த தானா அளித்தனர்.

இந்த நினைவு அறக்கட்டளைக்கு தொடர்ந்து எதிர்கால மாணவர்களின் ஆதரவு தருவார்கள் என்று நம்புகிறேன்.

இதில் திரட்டப்படும் நன்கொடைகளை எந்த நினைவுச்சின்ன கட்டிடத்தையும் உருவாக்க பயன்படுத்த முடியாது. மரியாதைக்குரிய குருதேவரின் தம்மம் மற்றும் தம்ம அர்ப்பணிப்புக்கு  அது பயன்படுத்தப்படும்.

இந்த புனித நுட்பம் (விபாசனா) மற்றும் அதை உயிருடன் மற்றும் துடிப்பாக வைத்திருப்பது அவருக்கு மிகச்சிறந்த நினைவுச்சின்னம் என்று முடிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் மாணவர்கள் ஒவ்வொருவரும் பயனடைகிறார்கள். அது அவரது வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஆகிறது. நீண்ட, நீண்ட காலம் அதிக எண்ணிக்கையிலான மக்கள் இந்த பாரம்பரியத்தை உயிரோடு வைத்திருப்பார்கள்.

இது ஒரு உண்மையான நினைவுச்சின்னமாக இருக்கும். அதுவே புனித குருதேவருக்கு அளிக்கும் சிறந்த மரியாதை. எனவே, இந்த நன்கொடை, நிதி வசதி இல்லாதவர்கள் விபாசனா சாதனா பயிலும் போது அவர்களுக்கு விபாசனா சாதனா கற்பிக்க ஏற்படும் செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்

புத்த கயாவில், இந்த புனிதமான மரியாதைக்குரிய குருதேவரின் தம்ம வேலையில் பங்கேற்ற மரியாதைக்குரிய தந்தை மற்றும் தாய் மற்றும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் அனைத்து மாணவர்களும் ஏராளமான ப்ராமியுடன் பயனடைய வேண்டும் என்பது என் தம்ம விருப்பம்.

உங்களுடைய,

சத்ய நாராயண் கோயங்கா

---

# ஒரு வயதான சாதகரின் பெருந்தன்மை

முகாம்: பம்பாய்

18 பிப்ரவரி 1971

அன்புள்ள பாபு பையா,

ப்ரணாம்.

ஜட்னி {ஒரிசா} ஸ்ரீ லக்ஷ்மி நாராயண படோடியா விடமிருந்து ஒரு அஞ்சல் வந்தது..

குருஜியின் புத்த கயா சங்க தானா நினைவு நிகழ்சியில் பங்கேற்பதற்காக அவர் கல்கத்தாவுக்கு சென்றடைந்தார். ஆனால் ரயில்வே வேலை நிறுத்தத்தின் காரணமாக புத்த கயா பயணம் மேற்க்கொள்ள முடியவில்லை

அவர் 'நினைவு நிதி'க்கான தனது பங்களிப்பு அனுப்பினார்.

உண்மையில், அவருடைய நிதி நிலை மிகவும் சிக்கலானது, இருப்பினும் அவர் தாராளமாக இருக்கிறார். பங்களிப்பு என்பது அவரது தூய பக்தியின் அடையாளம்.

விபாசன 'விழிப்புணர்வு தந்தது. ஆனால் உடல்நலக்குறைவு காரணமாக தற்போதைய நிலைமைகள் அவருக்கு அமைதி தரவில்லை என அவர் எழுதுகிறார். நான் பொறுமையை அறிவுறுத்தி ஆதரவு கடிதம் எழுதினேன்.

உங்களுடைய,

சத்ய நாராயண கோயங்கா

---



1970, ஏப்ரல் 9 முதல் 19 வரை தியான பயிற்சி வகுப்பு புத்த கயாவில் சமன்வய ஆசிரமத்தில் நடைபெற்றது. இது விபாசனா இந்தியாக்கு திரும்பி வந்தடைந்த வரலாற்று நிகழ்வாகும். பயிற்சி வகுப்பு முடிவில், மாணவர்கள் குருஜிக்கு மரியாதை செலுத்தினர். பின்னர் புகைப்படங்கள் எடுத்தனர். குருஜியின் இடதுபுறத்தில் இருப்பது டாக்டர் தம்மரதன் அவர்கள் இலங்கை பிக்கு அறிஞர், மற்றும் அவரது இடது பக்கத்தில் அமர்ந்திருப்பது அனகாரிகா ஸ்ரீ முனீந்திராஜி

---------------------------------------------------------------------------------------------------------------------------

# சயாகி யு பா கின் நினைவு அறக்கட்டளை நிறுவுதல்

முகாம்: பம்பாய்

13 பிப்ரவரி 1971

அன்புள்ள பாபு பையா,

ப்ரணாம்!

உங்களுடைய பல கடிதங்களுக்கு நான் பதில் அனுப்ப வேண்டியுள்ளது. இன்னும் ஓரிரு நாளில் என்னால் அவற்றை எழுத முடியும் என நினைக்கிறேன்.

சில விஷயங்களில் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு.

1. தயவு செய்து மா சயாமா, யு டின் யீ, யு பா ஃபோ மற்றும் யூ சிட் டின் ஆகியோற்கு இங்கே நான்: "சயாகி யு பா கின் நினைவு அறக்கட்டளை என்ற ஒரு அமைப்பை நிறுவ முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவிக்கவும். எதிர்காலத்தில், உலகில் எங்கிருந்தாலும் எதுவாக இருந்தாலும் மரியாதைக்குரிய குருதேவரின் நினைவாக இந்த அமைப்பின் கீழ் தம்ம நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனைத்து விபாசனா தியான மையங்களும் சயாகி யு பா கின் நினைவு விபாசனா மையங்கள் என்று அழைக்கப்படும்.

2. புத்த கயா கோவில் நிர்வாகக் குழு, கோயிலை ஒரு சுற்றுலா தலத்தின் தொல்பொருள் முக்கியத்துவம் மற்றும் வரலாற்று முக்கியத்துவ இடமாக கருதுகிறது. ஆனால் கடந்த இரண்டு மாதங்கள் நான் இங்கு தங்கி மற்றும் தம்ம முகாம்களை நடத்தியது பொது மக்களிடம் தம்மத்தின் வலுவான விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளதாக தோன்றுகிறது.

அவர்களிடமிருந்து அன்பின் ஆழமான ஒருமைப்பாடு மற்றும் நான் அரவணைப்பு உணர்வைப் பெற்றேன்.

கோவில் கோபுரத்தை தங்க முலாம் பூசப்பட்ட தகடுகளால் மூடி பர்மாவில் பகோடாவில் உள்ளது போல அதைச் ஒளிரச் செய்வதற்கு கோவில் நிர்வாக அமைப்புக் குழுவுடன் பேச முடிவு செய்துள்ளேன்.

முன்பு இலங்கையர்களும் மற்ற கோவில் பக்தர்களும் தொல்பொருள் முக்கியத்துவம் குறையும் என்று கருதி இத்தகைய கோரிக்கைகளை நிராகரித்து வந்தனர்.

ஆனால் இப்போது பொதுமக்கள் ஆதரவாக இருப்பதால் நேர்மறையான சூழல் பொதுவில் நிலவுவதால் அத்தகைய கோரிக்கைகளில் நான் வெற்றி பெறுவேன் என்று நம்புகிறேன். குருதேவ்வின் விருப்பம் போலவே இந்த முயற்சி நிச்சயமாக நடைபெறும்.

**தங்க** இலை மற்றும் திறமையான தொழிலாளர்கள் மற்றும் ஆகும் செலவுகள் இவை அனைத்தும் கூட பர்மாவிலிருந்து வர ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.

பர்மிய துணைத் தூதரகம் மூலம் அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இதற்காக அங்கு தியானிப்பவர்களின் கூட்டு முயற்சிகள் மூலம் நன்கொடை ஏற்பாடு செய்ய வேண்டும். இது கடினமான இருக்க வாய்ப்பில்லை.

3. “தி மஹா போதி ஜர்னல்” என்ற பத்திரிக்கையின் ஆங்கில காலாண்டு ஆசிரியர், டாக்டர் பிக்கு தம்மரதனா சயாகியின் நினைவாக நடைபெற்ற சங்கதானா நிகழ்சியில் கலந்து

கொண்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு சயாகியின் சிறப்புப் பதிப்பு அல்லது அவரைப் பற்றிய அனைத்து கட்டுரைகளுடனும் "சயாகி யு பா கின் நினைவு எண்" என்ற தலைப்புடன் வெளியிட ஒப்புக்கொண்டார். இதேபோல், சாரநாத்திலிருந்து மற்றொரு இந்தி பத்திரிகை "தர்மதூத்", சயாகி பற்றிய ஒரு பதிப்பை வெளியிடுவதாக கூறினர். நாங்கள் அவரது நினைவாக ஒரு கையேட்டை வெளியிட விரும்பினோம்.

இந்த பத்திரிகைகள் மூலம் செய்வது இன்னும் மிகவும் சிறப்பாக பலரை சென்று அடையும். "யு பா ஃபோ", அவர்கள், சயாகி அவருக்கு அஞ்சலிகளை வழங்க தங்கள் பத்திரிகைகளில் சயாகி பற்றிய கட்டுரைகளை வெளியிடுவதால் பர்மாவிலும் மற்றும் உலகின் பிற இடங்களிலும் உள்ள சயாகியின் சீடர்களுக்கு, ஒரு தபாலின் மூலம் சயாகியின் உயர்ந்த நிலை பற்றி தெரிவிக்க இயலும். இந்த மிக அவசரமான வேலையாக கருதி செயல்பட வேண்டும். இதற்காக நானும் நேரம் ஒதுக்கி ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதுவேன்.

உங்களுடைய,

சத்ய நாராயண் கோயங்கா

ஆசிரியர்: "தி மகா போதி ஜர்னல்" சிறப்பு பதிப்பு யு பா கின் நினைவு எண், ஏப்ரல் 1972 வெளியிடப்பட்டது. அதில் சயகி யு பா கின் உருவப்படம் முன் அட்டையில் இடம் பெற்றது.

---

## தம்மா தோஹா

**குருவர் தேரே புண்ய கா, கைஸா ப்ரபல் ப்ரதாப**

**ஜாகா போத அனித்ய கா, தூர ஹுயே பவ - தாப**

குருதேவ், உங்கள் நற்பண்புகளின் சக்தி மிகவும் பலம் பொருந்தியது. இது அனிச்சாவின் தம்ம ஞானத்தை எழுப்பி, உலக துன்பங்களை. அடியோடு நீக்குகிறது.

**தர்ம தியா குருதேவ யே கைஸா ரதன அமோல**

**ம்ருத்யுலோக கே ஜீவ கோ, அம்ருத கா ரஸ கோல**

குருதேவ் எனக்கு விலைமதிப்பற்ற மாணிக்கமான தம்மத்தைக் கொடுத்தார்; உலக உயிரினத்திற்கு அமிர்தத்தின் சாரத்தை வழங்கினார்.

**ஸத்குரு கீ ஸல்கத மிலீ, மிலா தர்ம கா ஸார**

**ஜீவன ஸப்ல பனா லியா, ஸிர கா பார உதார**

ஆசிரியருக்கு எல்லாம் ஆசிரியர் அவர். அவருடன் இணைந்து, நான் தம்மத்தின் சாரம் கிடைக்கப் பெற்றேன். வாழ்க்கையின் சிறந்த அர்த்தத்தை நான் கண்டேன். அது என் தலையில் இருந்த பெரும் துயரச் சுமையை நீக்கியது.

**துர்லப ஸத்குரு கா மிலன, துர்லப தர்ம மிலாப**

**தர்ம மிலா ஸத்குரு மிலே, மிடே ஸபீ ஸந்தாப**

ஒரு திறமையான ஆசிரியரைக் கண்டுபிடிப்பது அரிது. தம்மத்தைக் காணதல் அரிது. நான் தம்மம் மற்றும் இணையற்ற ஆசிரியரைக் கண்டேன். அவர் என் அனைத்து துயரங்களையும் போக்குகிறார்.